# <u>பத்திரிக்கை செய்தி</u>

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, சிவபுரி, நெ.335, வடபாதி தெரு, த/பெ.ராமலிங்கம் என்பவரது மகன் திரு.R.ஆசைதம்பி என்பவர் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் கூரை வீடுகட்டி குடியிருந்து வந்ததாகவும், பின்பு அதே இடத்தில் மாடிவீடு கட்டி குடியிருந்து வந்ததாகவும், அந்த வீட்டிற்கு மின் இணைப்பு பெற தடையில்லா சான்று வழங்குவதற்கு திரு. K.அசோகன், தனி வட்டாட்சியர் (கோயில் நிலங்கள்), சிதம்பரம் என்பவர் ரூ.2500/– லஞ்சம் கேட்டுள்ளார். இது தொடர்பாக ஆசைதம்பி என்பவர் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்ததன் பேரில், திரு. K.அசோகன், தனி வட்டாட்சியர் (கோயில் நிலங்கள்), சிதம்பரம் என்பவர் மீது 14.08.2012 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்றே பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது மேற்படி திரு. K.அசோகன் என்பவரும், அவருக்கு உடந்தையாக இருந்த திரு.R.முனுசாமி, ஓய்வுபெற்ற இளநிலை உதவியாளர் ஆகியோர்கள் ரூ.2500/– லஞ்சம் பெற்ற போது கைது செய்யப்பட்டனர். வழக்கின் விசாரணை மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இன்று 19.03.2025 ஆம் தேதி அவ்வழக்கின் விசாரணை முடிவில் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்கள் லஞ்சம் வாங்கிய தனி வட்டாட்சியர் திரு.K.அசோகன் மற்றும் ஓய்வுபெற்ற இளநிலை உதவியாளர் திரு.R.முனுசாமி ஆகியோர்கள் குற்றவாளி என தீர்ப்பளித்து, எதிரி–1 திரு.K.அசோகன் என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 7 க்கு இரண்டு வருடங்கள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/– அபராதமும் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 13(2) r/w 13(1)(d) க்கு இரண்டு வருடங்கள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/– அபராதமும் விதித்து, எதிரி–2 திரு. R.முனுசாமி என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 12 r/w 7 க்கு ஒரு வருடம் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/– அபராதமும் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 13(2) r/w 13(1)(d) க்கு இரண்டு வருடங்கள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.5,000/– அபராதமும், இந்திய தண்டனை சட்டம் 109 க்கு 6 மாதம் மெய்க்காவல் தண்டனையும், ரூ.1,000/– அபராதம் விதித்தும், மேற்படி சிறை தண்டனையை இரண்டு குற்றவாளிகளும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும் என்றும், மேலும் அபராத தொகை கட்டத்தவறினால் கூடுதலாக 6 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என தீர்ப்பளித்துள்ளார்.